தொட்டுத் தொட்டுப் பேச வரான் பெரியசாமி தூரனின் வரிகளில் – ஆரம்பமே அமர்க்களம். பின்னலை பின்னால் இருந்து இழுப்பதில் துவங்கும் கண்ணனின் சேட்டையைக் காட்டிய விதத்தில் ஷ்ரீயா :மௌனத்தில் மலைக்க வைத்தார். கட்டிக் கரும்பே தேனே கனியே என்றழைத்த வரிகள் வரும்போது வர்ணத்தின் நினைவுகளை ஓரங்கட்டி உயரம் தொட்டது அவரின் பாவம்.

இப்பாடலில் ரோஷிணியின் குரலா, நாகை நாராயணனின் லயமா (மிருதங்கம்), டாக்டர் முத்துக்குமரனின் நரம்பிசையா, அப்துல்குமாரின் குழலிசையா … எழுப்பிய கேள்விக்கு வரும் ஒரே பதில்: நால்வர் கூட்டணி வென்றது, ஷ்ரீயாவின் முகமோ மனத்திரையில் நின்றது. எல்லாப் புகழும் இறைவனுக்கே என்பது போல எல்லா புகழும் குரு விம்மி பி ஈஸ்வருக்கே!





பாட்டி சொல்லை தட்டாதே

"டில்லிக்கு ராஜானாலும் பாட்டி சொல்லை தட்டாதே…" என்று ஆச்சி மனோரமா ஏவி எம்மின் ''பாட்டி சொல்லை தட்டாதே" படத்தில் பாடியிருக்கும் பாடல் வரிகள், ஷ்ரீயாவுக்கு பொருந்தும். ''அக்கரை சீமையில் வளர்ந்தாலும்.. தமிழ்க் கலாச்சாரம் – பண்பாட்டை மறந்து விடாதே கர்நாடக இசை பரதம் பயின்று நல்ல பேர் எடு…'' என்று பாட்டி ஜானகியும், தாத்தா கோபாலகிருஷ்ணனும் சொல்லிக் கொடுத்த வார்த்தையை கெட்டியாய் பிடித்துக்கொண்டு அதற்கு செயல் வடிவம் கொடுத்திருக்கிறார் ஷ்ரீயா. தள்ளாத வயதிலும், சக்கர நாற்காலியில் வந்து, முன் வரிசையில் அமர்ந்து 90 நிமிடம் பேத்தியின் நாட்டியத்தை கண்டு ரசித்து, ஆசி கூறினார் தாய் வழி தாத்தா ஹரிஹரசுப்பிரமணியமும் , பாட்டி பாலச் சந்திராவும். குருவருள் துணை நிற்க, திருவருள் வழி நடத்த ஷ்ரீயா, பரதத்தில் பூர்ணமாக பிரகாசிப்பது உறுதி!

4 வயதில் பரதம் பயிலத் துவங்கினார் ஷ்ரீயா. (பிரகாஷ் – பூர்ணா தம்பதியின் மகள்). கர்நாடக இசை, பரதநாட்டியம் இரண்டிலும் வளர்ந்து வரும் இளம் கலைஞர்களுக்கு மேடை தந்து அவர்களை ஊக்குவித்து விருது அளித்து சான்றிதழ் கொடுத்து ஆளாக்கி இருக்கும் "என்றும் நினைவில் வாழும்" கோபால கிருஷ்ணனின் (கான முகுந்த பிரியா) பேத்தி ஷ்ரீயா என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்காலத்து கலாச்சார தூதுவர்

★ அந்நிய மண்ணில் இருந்தாலும் தமிழ் கலாச்சாரம் பண்பாடு ஆகியவற்றின் மீது நம்பிக்கை கொண்டு பிறந்த இடம் தேடி வந்து சென்னையில் அரங்கேற்றத்தை நடத்தியது மகிழ்ச்சிக்குரியது என்று பெற்றோர்களையும், மாணவியையும், குருவையும் நல்லி செட்டியார் வாழ்த்தினார்.

★ கல்வியோடு ஒரு கலையையும் மாணவி கற்றுக் கொண்டிருப்பதில் மாணவியோடு பெற்றோர்களையும் சேர்த்து பாராட்டியாக வேண்டும். எதிர்காலத்தில் கலாச்சார தூதுவராக ஷ்ரீயா வர வேண்டும் என்று நடன குருமார்கள் ரேவதி ராமச்சந்திரன், ஸ்ரீதேவி ராமச்சந்திரன் வாழ்த்தினார்கள்.

★ புஷ்பாஞ்சலியில் துவங்கி தில்லானாவில் நிறைவு செய்தாலும், மகாகவி பாரதியாரின் ஒரு பாடலை யாவது எடுத்து நடனக் கண்மணிகள் ஆட வேண்டும் என்று பாரதி புகழ் பாடும் நடனக் கலைஞர் ஷோபனா ரமேஷ் வேண்டுகோள் விடுத்தார்.

★ குரு விம்மி பி.ஈஸ்வர் என்ன சொல்லிக் கொடுத்தாரோ அதை அழகாக உள்வாங்கி, ஆடிக் காட்டி இருப்பதில் அருமை என்று மனம் திறந்து பாராட்டி வாழ்த்தினார் பேராசிரியர் ரகுராமன்.

அந்தரா நாட்டிய பள்ளியில் ஷ்ரீயாவுக்கு பயிற்சி தந்திருக்கும் ஆசிரியை சித்ரா ராஜனின் பங்களிப்பையும் அவர்கள் பாராட்டினார்கள். ஒப்பனை: முருகன், அழகுக்கு அழகு சேர்த்தார்.

உளவியல் பாடத்தில் (சைக்காலஜி) பட்டப் படிப்பில் சேர வேண்டும் என்று ஆர்வம் கொண்டிருக்கும் ஷ்ரீயா, பள்ளியில் கூடைப்பந்து, கால்பந்து, கிரிக்கெட் ஆகியவற்றில் ஆர்வலர், வீராங்கனை. தமிழிலும், ஆங்கிலத்திலும் நிகழ்ச்சியை சிறப்பாக தொகுத்து வழங்கிய விஹானிகாவை (தனியார் தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளர்) சிறப்பு விருந்தினர்கள் பிரத்யேகமாக குறிப்பிட்டு பாராட்டினார்கள். முடிவில் குரு விம்மி பி ஈஸ்வர் நன்றி கூறினார்.

வீ. ராம்ஜீ



4ம் ஆண்டு நினைவு தினம்: வசந்தகுமார் நினைவிடத்தில் குடும்பத்தினர், காங்கிரசார் அஞ்சலி

கன்னியாகுமரி, ஆக. 29–

வசந்த் அன் கோ நிறுவனரும், கன்னியாகுமரி தொகுதி முன்னாள் எம்.பி.யுமான எச்.வசந்தகுமாரின் 4ம் ஆண்டு நினைவு தினம் நேற்று அனுசரிக்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரத்தில் உள்ள அவரது மணிமண்டபத்தில் அமைந்துள்ள நினைவிடத்தில் வசந்தகுமாரின் மனைவி தமிழ்ச்செல்வி, மகள் தங்கமலர், மகன்கள் விஜய்வசந்த் எம்.பி., வினோத்குமார், மருமகன் ஜெகநாத், மைத்துனர் காமராஜ், சண்முகசுந்தரம் உள்பட குடும்பத்தினர் சிறப்பு பூஜை மற்றும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இதனை தொடர்ந்து காங்கிரஸ் சார்பில் குமரி கிழக்கு மாவட்ட தலைவர் கே.டி.உதயம், மேற்கு மாவட்ட தலைவர் பினுலால் சிங், மாநில செயலாளர் சீனிவாசன், மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு நினைவிடம் மற்றும் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து மாவட்டத்தில் பொதுமக்கள் சேவைக்காக குளங்கள் மற்றும் கால்வாய்கள் தூர்வார புதிய பொக்லைன் எந்திரத்தை விஜய்வசந்த் எம்.பி.யிடம், தமிழ்செல்வி வசந்தகுமார் வழங்கினார்.

இதையடுத்து நடைபெற்ற சமபந்தி விருந்தை விஜய்வசந்த் எம்.பி. தொடங்கி வைத்தார்.

சென்னை சத்தியமூர்த்தி பவனில், வசந்தகுமார் உருவப் படத்திற்கு, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை மலர் தூவி மரியாதை செலுத்தினார். மேலும், தியாகராய நகரில் உள்ள தக்கர் பாபா பள்ளி வளாகத்தில் ஏழை எளியோருக்கு நலத்திட்ட உதவிகள், அன்னதானம் வழங்கினார்.

NAME CHANGE

I, VIMALA VIJAYARAJ, W/o Mr.Vijay Raj Baid and D/o Uttam Chand Chordiya, Age About 64 years, Jain, Residing at, No:20, Kondaliar Street, 2nd Floor, Kondithope, Sowcarpet, Chennai- 600001. Shall Henceforth Be known as VIMALA DEVI BAID.

VIMALA VIJAYARAJ

BEFORE THE HON'BLE VIth ADDITIONAL FAMILY COURT AT CHENNAI
I.D.O.P.No.123 Of 2024

Mr.K.Nagaraj,(Aged 51 years), S/o.Mr. Daniel, Now residing at No. 38, 3rd floor, F-block, 2nd cross street, Thanikachalam Nagar, Ponniammanmedu, Chennai-600 110. …Petitioner

Vs

Mrs.N.Swarnalatha (Aged 41 years), W/o.K.Nagaraj, No.71,9th lane, Anjaneya Nagar, Royapuram, Chennai-600013 …..RESPONDENT

NOTICE

Please take notice that original petition vide O.P.No.123 of 2024 has been filed by the Petitioner Mr. K.Nagaraj with a prayer seeking to dissolve the marriage solemnised on 18.05.1999 at Kamala Velu Kalyana Maligai, Cement Road, Royapuram, Chennai-600 021 as per Christian rites and Customs. The subject matter came up for hearing on 23.08.2024 before the Hon'ble Court and hereby it is informed that you Mrs. N.SWARNALATHA (Respondent), shall appear either in person or through a counsel before the learned VIth Additional Family Court, Chennai on 28.10.2024 at 10:30 AM, failing which the subject matter shall be decided in your absence.

K.NAGARAJ
Party-In-Person/Petitioner

Vth ADDITIONAL JUDGE IN THE COURT OF CITY CIVIL COURT AT CHENNAI
I.A.NO. 1 and 2 of 2024 in A.S.NO. 163 OF 2024 AND A.S.NO. 163 OF 2024

1. K.B.Rajendran and 4 Others ..Petitioners/Appellants-In-Person

Vs

1. Arulmighu Dharmaraja Temple, Guzilli Bazaar Road, Chennai-3 And Others ...Respondents/Respondents

To:
1.Tvl. G.Sundara raghavulu, S/o.K.Guruswamy Naidu, Now Residing at old door no. 29, new no.63 R.G.Thiruvengadam Mudali street, Choolai, Chennai - 600112. (rank no. R-15)
2.Tvl. M.Bhairava Gurukkal, S/o.Somasundara Gurukkal,(R-14)
3. Tvl. M.B.Kandaswamy, S/o M.Bhairava gurukkal, (rank No. R-17)
4. Tvl. M.B.Saravanan, S/o. M.Bhairava gurukkal, (rank no. R-18)
5. Tvl. M.B.Karthikeyan, S/o. M.Bhairava gurukkal, (rank no. R-19)
6. Tvl. M.B.Shanmugam, S/o. M.Bhairava gurukkal,(R-20) (all the respondents R-14, R-17, R-18, R-19 and R-20 No.7, Peddu Naicken Street, Chennai -600003. Now residing at old no.8, new no. 13, Peddu Naicken street, Chennai - 600003.

Please take Notices that the Above-named Petitioners and Appellants-in-person have filed the I.A.No. 1 and 2 of 2024 in A.S.No. 163 of 2024 And in A.S.No.163 of 2024 before the Vth Additional Judge, City Civil Court at Chennai against the Judgement and Decree Order dated 28.03.2024 passed in O.S.No.4738 of 2020 on the file of XVIIIth Assistant Judge, City Civil Court, Chennai.

Hon'ble Vth Additional Judge, City Civil Court, Chennai was pleased and ordered to issue Notices to you all on 9.8.2024 which is returnable by 09.09.2024

It is hereby informed to you all that your appearance before the Vth Additional Judge, City Civil Court, Chennai are required either personally or thru your consel on 09.09.2024 at 10.30 a.m. failing which appropriate orders will be passed against you all and the above matter will be decided on merits in your absence.

Kindly take notice in I.A.No.1 AND 2 of 2024 IN A.S.No. 163/ 2024 AND IN A.S.No. 163 of 2024 AND APPEAR BEFORE THE SAID COURT WITHOUT FAIL

K.B. RAJENDRAN
PETITIONER AND APPELLANTS-IN-PERSON.

ஃபேன்டம் டிஜிட்டல் எஃபக்ட்ஸ் லிமிடெட்

PhantomFX UNLEASHING THE MAGIC

CIN: L92100TN2016PLC103929

பதிவு அலுவலகம்: 6வது தளம், டவர் பி, காஸ்மோ ஒன் டெக்,
மனை எண். 14, 3வது பிரதான சாலை, அம்பத்தூர், சென்னை – 600058, தமிழ்நாடு, இந்தியா.
தொலைபேசி : 044-4384 6228 இணையதளம் : www.phantomfx.com மின்னஞ்சல் : cs@phantom-fx.com

8வது (எட்டாவது) ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் மின்னணு வாக்களிப்பு பற்றிய தகவல்

நிறுவனத்தின் 8வது ஆண்டு பொதுக்கூட்டம் கூட்டுதல் அறிவிப்பில் பட்டியலிடப்பட்டுள்ள வணிகத்தை பரிவர்த்தனை செய்ய, கார்ப்பரேட் விவகார அமைச்சகம் மற்றும் செக்யூரிட்டிஸ் அண்ட் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா வழங்கிய பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளுக்கு இணங்க, M/s. ஃபேன்டம் டிஜிட்டல் எஃபக்ட்ஸ் லிமிடெட் (கம்பெனி)டின் 8வது (எட்டாவது) பொதுக்கூட்டம் **வியாழக்கிழமை, 19 செப்டம்பர் 2024 அன்று காலை 11.00 மணிக்கு (இந்திய நேரப்படி)** காணொலி காட்சி (VC) அல்லது பிற ஒலி ஒளி வழிமுறைகள் (OAVM) மூலம் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. கூட்டம் நடைபெறும் இடம் நிறுவனத்தின் பதிவு அலுவலகமாக இருக்கும்.

நிறுவனம் / நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவர், பூர்வா ஷேர்ஜிஸ்ட்ரி இந்தியா பிரைவேட் லிமிடெட் (RTA) / டெபாசிட்டரி பங்கேற்பாளர்களுடன் (DP) மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்த நிறுவனத்தின் உறுப்பினர்களுக்கு ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பு, 2023-24 நிதியாண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகள், குழு அறிக்கை, தணிக்கையாளர்களின் அறிக்கை மற்றும் அதனுடன் இணைக்கப்பட வேண்டிய பிற ஆவணங்கள் மின்னணு முறையில் **புதன்கிழமை 28 ஆகஸ்ட், 2024** அன்று அனுப்பப்பட்டுள்ளது. ஆண்டு பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் மேற்கூறிய ஆவணங்கள் நிறுவனத்தின் இணையதளம் www.phantomfx.com மற்றும் பங்குச் சந்தையின் இணையதளத்தில் அதாவது, இந்திய தேசிய பங்குச் சந்தையின் ("NSE") இணையதளம் www.nseindia.comல் கிடைக்கும். ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள், ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பு புழக்கத்தில் உள்ள தேதியிலிருந்து உறுப்பினர்களால் மின்னணு முறையில் ஆய்வுக்குக் கிடைக்கும். அத்தகைய ஆவணங்களை ஆய்வு செய்ய விரும்பும் உறுப்பினர்கள் csphantom-fx.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் ஆண்டு பொதுக் கூட்டத்தின்போது மின்னணு வாக்குப்பதிவு:

நிறுவனங்கள் சட்டம் 2013ன் பிரிவு 108 மற்றும் பொருந்தக்கூடிய பிற விதிகள் ஏதேனும் இருந்தால், அந்த விதிகள் மற்றும் நிறுவனங்களின் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014-ன் விதி 20 மற்றும் செபி (பட்டியல் கடமை மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015-ன் 44வது ஒழுங்குமுறை ஆகியவற்றுக்கு இணங்க, நிறுவனம் அதன் உறுப்பினர்களுக்கு மின்னணு முறையில் (**''மின்னணு வாக்களிப்பு''**) ஆண்டு பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களில் வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்துவதற்கான வசதியை வழங்குகிறது. உறுப்பினர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் தொலைதூரத்தில் (**''தொலைதூர மின்னணு வாக்களிப்பு''**) இருந்து வாக்களிக்கலாம். இந்நிறுவனம் மின்னணு வாக்களிக்கும் வசதிக்காக NSDLன் சேவைகளை ஈடுபடுத்தியுள்ளது.

டிமெட்டீரியலைஸ்டு முறையில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் தொலைதூரத்தில் வாக்களிப்பது உட்பட வாக்களிக்கும் விதம் மற்றும் அவர்களின் மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்யாத உறுப்பினர்களுக்கு வாக்களிக்கும் முறை அடங்கிய தகவல் மற்றும் வழிமுறைகள் AGM அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளன. ஆண்டு பொதுக் கூட்ட அறிவிப்பை அனுப்பிய பிறகு (A) நிறுவனத்தின் உறுப்பினர்களாகும் நபர்கள் மற்றும் கட்-ஆஃப் தேதியின்படி பங்குகளை வைத்திருக்கும் விதம் (இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது); மற்றும் (b) பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல்லை மறந்துவிட்ட உறுப்பினர்கள் பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல்லைப் பெறுதல்/உருவாக்குவது குறித்தும் ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

தொலைதூர மின்னணு வாக்களிக்கும் வசதி பின்வரும் வாக்களிப்பு காலத்தில் கிடைக்கும்:

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு துவக்கம்: **செப்டம்பர் 16, 2024 திங்கட்கிழமை காலை 09:00 (இந்திய நேரப்படி)**

தொலை மின்னணு வாக்களிப்பு முடிவு: **செப்டம்பர் 18, 2024 புதன்கிழமை மாலை 05:00 (இந்திய நேரப்படி)**

மேற்கூறிய தேதி மற்றும் நேரத்திற்கு அப்பால் தொலை மின்னணு வாக்களிப்பு அனுமதிக்கப்படாது மேலும் மேற்கூறிய காலம் முடிவடைந்தவுடன் தொலைதூர மின்னணு வாக்களிப்பு தொகுதி NSDLஆல் உடனடியாக நிறுத்தப்படும்.

ஆண்டு பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளும் உறுப்பினர்கள் தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களிக்காதவர்கள் ஆண்டு பொதுக்கூட்டத்தில் மின்னணு முறையில் வாக்களிக்க முடியும்.

கட்-ஆஃப் தேதியின்படி, அதாவது செப்டம்பர் 12, 2024 வியாழக்கிழமை அன்று, உறுப்பினர்களின் பதிவேட்டில் / நன்மை பயக்கும் உரிமையாளர்களின் பதிவேட்டில் யாருடைய பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளதோ, அவர் தொலைதூர மின்னணு வாக்களிக்கும் வசதி அல்லது வருடாந்திர பொதுக் கூட்டத்தில் வாக்களிக்கும் வசதியை பெறத் தகுதியுடையவர்.

மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யும்/புதுப்பிக்கும் முறை:

தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யாத / புதுப்பிக்காத உறுப்பினர்கள், தங்கள் டிமேட் கணக்குகளைப் பராமரிக்கும் டெபாசிட்டரி பங்கேற்பாளரிடம் தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்ய / புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மின்னணு வாக்களிப்பு தொடர்பான ஏதேனும் கேள்விகள் இருந்தால், உறுப்பினர்கள் ''உதவி'' மற்றும் ''FAQs'' பிரிவுகள் / மின்னணு வாக்களிப்பு பயனர் கையேடு மூலம் கிடைக்கும் என்எஸ்டிஎல் இணையதளத்தில் வாக்களிப்பிற்கான ''பதிவிறக்கங்கள்' பிரிவில் உள்ள கீழ்தோன்றும் மெனுவைப் பார்க்கலாம்: www.evoting.nsdl.com

ஏதேனும் கேள்விகள் இருந்தால், அது குறித்து www.evoting.nsdl.comன் பதிவிறக்கப் பிரிவில் கிடைக்கும் பங்குதாரர்களுக்கான அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs) மற்றும் பங்குதாரர்களுக்கான மின்னணு வாக்களிப்பு பயனர் கையேட்டை பார்க்கவும் அல்லது 022 - 4886 7000 என்ற எண்ணை அழைக்கவும் அல்லது evotingnsdl.comக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

VC/OAVM மூலம் ஆண்டு பொதுக்கூட்டத்தில் சேருதல்:

என்எஸ்டிஎல் மின்னணு வாக்குப்பதிவு முறை மூலம் VC/OAVM மூலம் ஆண்டு பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளும் வசதி உறுப்பினர்களுக்கு வழங்கப்படும். ஆண்டு பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்குப் பயன்படுத்த வேண்டிய வழிமுறைகள் மற்றும் பின்பற்ற வேண்டிய நிலைகள் பற்றிய தகவல்கள் ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பின் குறிப்பில் விளக்கப்பட்டுள்ளன. தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களித்த உறுப்பினர்களும் ஆண்டு பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம். ஆனால் ஆண்டு பொதுக் கூட்டத்தில் மீண்டும் வாக்களிக்க உரிமை பெற மாட்டார்கள்.

இயக்குநர்கள் குழுவின் உத்தரவின்படி
ஒப்பம்/--
பூர்ணிமா ரகு
நிறுவன செயலர் மற்றும் இணக்க அதிகாரி

இடம் : சென்னை
தேதி : ஆகஸ்ட் 29, 2024

யூகால் லிமிடெட்

UCAL

(முன்னர் யூகால் பியூயல் சிஸ்டம்ஸ் லிமிடெட்)
பதிவு அலுவலகம்: 11 பி/2 (எஸ்.பி), முதல் குறுக்கு சாலை,
அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை 600 058
தொலைபேசி எண்.044–66544719
மின்னஞ்சல்: investor@ucal.com; இணையதளம்:www.ucal.com
CIN:L31900TN1985PLC012343

அறிவிப்பு

(கம்பெனியின் சமபங்குதாரர்களின் கவனத்திற்கு)

பொருள்: கம்பெனியின் சமபங்குகளை முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதிக்கு (ஐஇபிஎப்) மாற்றம் செய்தல்

செப்டம்பர் 7, 2016, முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம் அறிவித்தபடி மற்றும் பின்னர் திருத்தப்பட்ட பிப்ரவரி 28, 2017 தேதியிட்ட அறிவிப்பு ("விதிகள்") மற்றும் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (கணக்கு, தணிக்கை, இடமாற்றம் மற்றும் பணத்தைத் திரும்பப் பெறுதல்) விதிகள் 2016ன்படி பங்குதாரர்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

மற்ற விஷயங்களுக்கு இடையே இந்த விதிகளின்படி, தொடர்ச்சியாக ஏழு ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் பங்குதாரர்களால் ஈவுத்தொகை செலுத்தப்படாத அல்லது கோரப்படாத அனைத்து பங்குகளையும் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி (ஐஇபிஎப்) ஆணையத்தின் பெயரில் மாற்றுவதற்கான ஏற்பாடுகளை கொண்டுள்ளது.

விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு தேவைகளுக்கு இணங்க, 2016–17 நிதியாண்டில் இருந்து தொடர்ச்சியாக கடந்த ஏழு வருடங்களாக தங்கள் ஈவுத்தொகையை கோராத மற்றும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மேற்சொன்ன விதிகளின் கீழ் ஐஇபிஎப் ஆணையதத்திற்கு மாற்றப்பட உள்ள பங்குகள் குறித்து அனைத்து சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுக்கும் அவர்களின் சமீபத்திய முகவரிக்கு கம்பெனி பல்வேறு தேதிகளில் தகவல் அனுப்பியுள்ளது.

அத்தகைய பங்குதாரர்கள் மற்றும் ஐஇபிஎப் ஆணையத்திற்கு மாற்ற வேண்டிய பங்குகளின் முழுமையான விவரங்களையும் www.ucal.com என்ற இணையதளத்தில் கம்பெனி பதிவேற்றியுள்ளது. ஈடுசெய்யப்படாத ஈவுத்தொகை மற்றும் ஐஇபிஎப் ஆணையத்திற்கு மாற்றப்பட வேண்டிய பங்குகளின் விவரங்களை சரிபார்க்க வெப்லிங்க் http://www.ucal.com/investor/Details of sharesஐ பார்க்குமாறு பங்குதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அத்தகைய பங்குகளில் சேரும் அனைத்து நன்மைகளும் உட்பட, உரிமை கோரப்படாத ஈவுத்தொகை மற்றும் தொடர்புடைய பங்குகள் ஐஇபிஎப் ஆணையம்/சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றப்பட்டது என்பதையும் செல்லுபடியாகும் உரிமைகோரல் தேதி வரை, இது தொடர்பான விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள முறையான நடைமுறையைப் பின்பற்றி, ஐஇபிஎப் ஆணையத்திடம் இருந்து திரும்பக் கோரலாம் என்பதையும் பங்குதாரர்கள் தயவுசெய்து கவனத்தில் கொள்ள வேண்டும்.

காகித வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் மற்றும் ஐஇபிஎப் ஆணையத்திற்கு மாற்றப்பட இருக்கும் பங்குகளை வைத்துள்ள சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் பங்குகளை ஐஇஎபிஎப் ஆணையத்திற்கு மாற்றும்போது, அவர்களின் பெயரில் பதிவு செய்யப்பட்ட அசல் பங்கு சான்றிதழ்கள் தானாக ரத்தாகிவிடும் மற்றும் எந்தவித வர்த்தகமும் மேற்கொள்ள முடியாது. டிமேட் படிவத்தில் வைத்திருக்கும் பங்குகள் இருந்தால், மாற்றப்பட வேண்டிய பங்குகளின் அளவிற்கு, பங்குதாரர்களின் கணக்கில் இருந்து பற்று வைக்கப்படும்.

மேற்சொன்ன விதிகளின்படி, 3.11.2024–க்குள் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களிடமிருந்து கம்பெனி எந்த தகவலையும் பெறவில்லை என்றால், தொடர்ச்சியாக ஏழு வருடங்களுக்கு செலுத்தப்படாத/உரிமை கோரப்படாத ஈவுத்தொகைக்கு தொடர்புடைய பங்குகள் ஐஇபிஎப் ஆணையத்திற்கு வரவு வைக்கப்படும் மற்றும் அதன் அடிப்படையில் கம்பெனிக்கு எதிராக எந்த உரிமைகோரலும் எழுப்ப முடியாது.

அத்தகைய பங்குகளில் சேரும் அனைத்து நன்மைகள் உட்பட ஐஇபிஎப் ஆணையத்திற்கு மாற்றப்பட்ட பங்குகளை விதிகளின்படி பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம் ஐஇபிஎப் ஆணையத்திடமிருந்து அவற்றை கோரி பெறலாம். அவை ஐஇபிஎப் வலைதளம் www.iepf.gov.in.ல் உள்ளது.

மேற்கூறிய பொருள் குறித்த கேள்விகளுக்கு, பங்குதாரர்கள் கம்பெனியின் பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவர்கள், இன்டக்ரேட்டட் ரிஜிஸ்திரி மானேஜ்மெண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட், இரண்டாவது மாடி, "கென்சஸ் டவர்ஸ்", எண் 1 ராமகிருஷ்ணா தெரு, ஆப். வடக்கு உஸ்மான் சாலை, தி. நகர், சென்னை 600 017, தமிழ்நாடு, தொலைபேசி எண் .044–28140801– 28140803; மின்னஞ்சல்: csdstd@integratedindia.inல் அணுகலாம்.

(குழு உத்தரவுப்படி)
யூகால் லிமிடெட்டிற்காக
S. நாராயண்
கம்பெனி செயலாளர்

தேதி: 28.08.2024
இடம்: சென்னை

படிவம் A
பொது அறிவிப்பு
(இந்திய திவாலா நிலை மற்றும் திவால் வாரியத்தின் ஒழுங்கு முறைகள் 6-ன் கீழ்)
(பெருநிறுவன நபர்களுக்கான திவாலா நிலை தீர்மான செயல்முறைகள்) ஒழுங்குமுறைகள் 2016)
M/s.ஹால்மார்க் இன்ஃபராஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட்-ன் கடன்தாரர்களின் கவனத்திற்கு
(CIN: U45203TN2005PTC057312)

பொருத்தமான தகவல்கள்

1.	பெருநிறுவன கடன்தாரரின் பெயர்	M/s.ஹால்மார்க் இன்ஃபராஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட்
2.	கடன் பெற்ற பெருநிறுவனம் இணைக்கப்பட்ட தேதி	29.08.2005
3.	பெருநிறுவன கடன்தாரர் எந்த குழுமத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ளது/ பதிவு செய்யப்பட்டுள்ளது	கம்பெனிகளின் பதிவாளர் - சென்னை
4.	பெருநிறுவனத்தின் அடையாள எண் / பெருநிறுவன கடன்தாரரின் வரையறுக்கப்பட்ட பொறுப்பு அடையாள எண்.	CIN : U45203TN2005PTC057312
5.	பெருநிறுவன கடன்தாரரின் பதிவு அலுவலக முகவரி மற்றும் முதன்மை அலுவலகம் (ஏதேனும் இருந்தால்)	சூட் A, எண்.43, பழைய எண்.62/2, யுனைடெட் பிளாசா, உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை - 600 017.
6.	பெருநிறுவனகடன்தாரரின் திவாலா நிலை ஆரம்பித்த நாள்	23.08.2024 (மின்னஞ்சல் மூலமாக இடைக்கால தீர்மான வல்லுனரால் உத்தரவு நகல் 27.08.2024 அன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.
7.	திவாலா நிலை தீர்மான நடவடிக்கை முடிவுறும் என கணிக்கப்பட்ட தேதி	19.02.2025 (180 நாட்கள் CIRP தொடங்கப்பட்ட தேதியிலிருந்து அதாவது 23.08.2024)
8.	இடைக்கால தீர்மானத்திற்கான தொழில் வல்லுநரின் பெயர், மற்றும் பதிவு எண்.	திரு.பாதுகாசஹஸ்ராம் ரகுநாதன் ராமன் IBBI/IPA-002/IP-N00295/2017-18/10896
9.	வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட இடைக்கால தீர்மானத்திற்கான தொழில் வல்லுநரின்முகவரி மற்றும் மின்னஞ்சல்	93, தரை தளம், சிவன் கோவில் தெற்கு தெரு, வடபழனி, சென்னை - 600 026. மின்னஞ்சல் : ramann_pr@yahoo.co.in
10.	இடைக்கால தீர்மான வல்லுநருடன் கடித தொடர்புக்கு பயன்படுத்த வேண்டிய முகவரி மற்றும் மின்னஞ்சல்	93, தரை தளம், சிவன் கோவில் தெற்கு தெரு, வடபழனி, சென்னை - 600 026. மின்னஞ்சல் : prramancirp@gmail.com
11.	உரிமைகோரல்களை சமர்ப்பிக்க கடைசி தேதி	06.09.2024
12.	இடைக்கால தீர்மான வல்லுநரால் அறிந்து கொள்ள பிரிவு 21, உப பிரிவு (6A) உட்கூறு (b) -ன் கீழ் கடன்தாரர்களின் பிரிவுகள் ஏதேனும் இருப்பின்	குடியிருப்பு திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளவர்கள் (வீடு வாங்கியவர்கள்)
13.	இந்த பிரிவில் கடன் அளிப்பவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகளாக செயல்படுவதை அடையாளம் காட்டும் திவாலா நிலை வல்லுநர்கள் (ஒவ்வொரு பிரிவிலும் மூன்று பெயர்கள்)	1. முத்துராசபுரம் கணேசன் சந்திரசேகரன் IBBI/IPA-003/00337/2021-22/13620 2. வித்தல் M.தாக் IBBI/IPA-003/IP-N-0000117/2017-18/11296 3. T. ரங்கநாதன் IBBI/IPA-003/ICAI-N-00364/2021-22/13807
14.	(a) தொடர்புடைய படிவங்கள் மற்றும் (b) அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் விவரங்கள் கிடைக்கும் இணையதளம்	(a) https://ibbi.gov.in/en/home/downloads (b) அசல் முகவரி : 93, தரை தளம், சிவன் கோவில் தெற்கு தெரு, வடபழனி, சென்னை - 600 026.

தேசிய கம்பெனி சட்ட தீர்ப்பாயம், **M/s.ஹால்மார்க் இன்ஃபராஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட்-ன்** பெருநிறுவன திவாலா நிலை தீர்மான செயல்முறைகள் நடவடிக்கைகள் 23.08.2024 அன்று தொடங்குவதற்கு உத்தரவிட்டுள்ளது என இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது, (உத்தரவு நகல் மின்னஞ்சல் மூலமாக இடைகால தீர்மான வல்லுனரால் பெறப்பட்ட தேதி **27.08.2024).**

M/s.ஹால்மார்க் இன்ஃபராஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட்-ன் கடன்தாரர்கள் தங்களது உரிமை கோரலுக்கான ஆதாரங்களை **06.09.2024** அன்று அல்லது அதற்கு முன்பாக வரிசை எண்.10-ல் குறிப்பிட்டுள்ள இடைக்கால தீர்மான வல்லுநர் முகவரிக்கு சமர்ப்பிக்குமாறு இதன் மூலம் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

நிதி கடன் வழங்கியவர்கள், தங்களது உரிமை கோரிக்கைக்கான ஆதாரங்களை மின்னணு மூலமாக மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். அனைத்து பிற கடன்தாரர்கள் தங்களது உரிமை கோரலுக்கான ஆதாரங்களை நேரிலோ, அஞ்சல் வழியாகவோ அல்லது மின்னனு வழியாகவோ சமர்ப்பிக்கலாம்.

வரிசை எண்.12-ல் எதிராக பட்டியலிடப்பட்டுள்ளபடி ஒரு பிரிவுக்குச் சொந்தமான நிதிச் கடன் அளிப்பவர்களது படிவம் CA-ல் பொருந்தாது என குறிப்பிட்ட பிரிவின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகளாக செயல்பட வரிசை எண்.13-க்கு எதிராக பட்டியலிடப்பட்ட மூன்று நொடிப்பு வல்லுநர்களிடமிருந்து அங்கீகரிக்கப்பட்ட பிரதிநியாக குறிக்கோளை குறிக்கும்.

போலியான அல்லது தவறான ஆதாரங்களை உரிமைகோரலுக்காக சமர்ப்பிப்பது தண்டனைக்கு வழிவகுக்கும்.

திரு.பாதுகாசஹஸ்ராம் ரகுநாதன் ராமன் (P.R.ராமன்)
M/s.ஹால்மார்க் இன்ஃபராஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் (CIRP-க்கு உட்பட்டது)
-ன் விஷயமாக இடைக்கால தீர்மான வல்லுனர்
IBBI/IPA-002/IP-N00295/2017-18/10896
93, தரை தளம், சிவன் கோவில் தெற்கு தெரு,
வடபழனி, சென்னை - 600 026.
PH : .+91 9841026621, Mail Id. prramancirp@gmail.com
ramann_pr@yahoo.co.in

நாள் : 29.08.2024
இடம் : சென்னை
E & OE



வாணியம்பாடி நகர கழக செயலாளர் ஜி.சதாசிவம் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர் அட்டை வழங்கும் நிகழ்ச்சியில், திருப்பத்தூர் மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கே.சி. வீரமணி பங்கேற்று சிறப்புரையாற்றி , கழக நிர்வாகிகள் மற்றும் கிளைக் கழக செயலாளர்களிடம், கழக புதிய உறுப்பினர் அடையாள உரிமை சீட்டுகளை வழங்கினார். வாணியம்பாடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜி. செந்தில்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கோவி.சம்பத்குமார், மாவட்ட வர்த்தக அணி செயலாளர் ஆர்.வி.குமார், நகர கழக நிர்வாகிகள் கோவிந்தன், உதயகுமார், தென்னரசு, தன்ராஜ், நகர மன்ற உறுப்பினர் ஜாஹிர் அஹமத், எஸ்.டி.ஆரிப், எம். லிங்கநாதன், சதீஸ்வரன், சங்கர், நவீன், பூபாலன், செந்தில், பாரதிதாசன், சென்ராயன், எம்.ஜி.ஜெய்சங்கர், மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றிய அண்ணா தி.மு.க. சார்பில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், குன்றத்தூர் ஒன்றிய செயலாளருமான மதனந்தபுரம் கே.பழனி தலைமையில் காவனூர் ஊராட்சியில் மாவட்ட எம்.ஜி.ஆர். மன்ற இணைச் செயலாளர் கே.எல். வெங்கடேசன் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான வி.சோமசுந்தரம் பங்கேற்று கழகத்தினருக்கு புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வாலாஜாபாத் பா.கணேசன், காஞ்சி பன்னீர்செல்வம், ஒரத்தூர் என். டி.சுந்தர், ரேவதாட்சாயினி சுந்தர்ராஜன், சாலமங்கலம் ஓ.ராஜமாணிக்கம், திலக்குமார், வில்வபதி, படப்பை மோகன்ராஜ், ஹாரிவேந்தர், படப்பை ராஜேந்திரன், முனு ஆதி, பொன்னம்பலம், வட்டம்பாக்கம் வேதகிரி, புண்ணியகோட்டி, பிரசாந்த், உமாமகேஸ்வரி வெங்கடேசன், கோவிந்தன், சாந்தி கண்ணன், குட்டி என்கிற வெங்கடேசன், இந்துமதி பிரசாந்த், மேகராஜ், முருகன், அரிதாஸ், ஜெயகாந்தன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.